அலகு தேர்வு 5

**மேல்நிலை இரண்டாம் ஆண்டு ----- கணக்குப்பதிவியல்**

# பாடம் 5. கூட்டாளி சேர்ப்பு

**காலம் : 75 நிமிடம்** **மதிப்பெண்கள் : 50**

## பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 10 × 1 = 10

**சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக :**

1. மறுமதிப்பீட்டில் சொத்துகளின் மதிப்பு உயர்வது --------

அ) ஆதாயம் ஆ) நட்டம் இ) செலவு ஈ) இவற்றுள் எதுவுமில்லை

2. கூட்டாளியின் புதிய இலாபப் பகிர்வை விட பழைய இலாபப் பகிர்வு அதிகமாக இருந்தால் அவ்வேறுபாடு அழைக்கப்படுவது

அ) முதல் விகிதம் ஆ) தியாக விகிதம் இ) ஆதாய விகிதம் ஈ) இவற்றுள் எதுவுமில்லை

3. மறுமதிப்பீட்டு கணக்கின் பற்று பக்கத்தில் இடம் பெறக்கூடியது எது?

அ) பொறுப்புகளின் மதிப்பு குறைதல்
ஆ) பொறுப்புகளின் மதிப்பு அதிகரித்தல்
இ) சொத்துகளின் மதிப்பு அதிகரித்தல்
ஈ) பதிவுறா முதலீடுகளை ஏடுகளில் கொண்டு வருதல்

4. கூட்டாளி சேர்ப்பு தொடர்பாக பின்வரும் கூற்றுகளில் எது உண்மையானதல்ல?

அ) பொதுவாக கூட்டாளிகளின் பரஸ்பர உரிமைகள் மாறும்
ஆ) முந்தைய ஆண்டுகளின் இலாபம் மற்றும் நட்டங்கள் பழைய கூட்டாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்
இ) கூட்டாண்மை நிறுவனமானது புதிய ஒப்பந்தத்தின் கீழ் மறு கட்டமைக்கப்படும்
ஈ) ஏற்கனவே உள்ள ஒப்பந்தமானது முடிவுக்கு கொண்டு வரப்படாது

5. பட்டியல் I ஐ மற்றும் பட்டியல் II உடன் ஒப்பீடு செய்து சரியான விடையை கீழே கொடுக்கப்பட்டுள்ள சரியான குறியீட்டை பயன்படுத்தி தெரிவு செய்யவும்.

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (i) தியாகவிகிதம் | 1. முதலீட்டு மாறுபடும்நிதி |
| (ii) பழைய இலாபப் பகிர்வு விகிதம் | 2. பகிர்ந்துதராஇலாபம் |
| (iii) மறுமதிப்பீட்டு கணக்கு | 3. நற்பெயர் |
| (iv) முதல் கணக்கு | 4. பதிவுறா பொறுப்பு |

குறியீடுகள்:

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| அ | 1 | 2 | 3 | 4 |
| ஆ | 3 | 2 | 4 | 1 |
| இ | 4 | 3 | 2 | 1 |
| ஈ | 3 | 1 | 4 | 2 |



6. பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடுக்கவும்

அ) மறுமதிப்பீட்டு இலாபம் ஆ) பகிர்ந்தளிக்கப்படாத இலாபம்
இ) புதிய கூட்டாளி கொண்டு வந்த நற்பெயர் ஈ) முதலீட்டு மாறுபடும் நிதி

7. ஜேம்ஸ் மற்றும் கமல் இலாப நட்டங்களை 5:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர். அவர்கள் சுனில் என்பவரை 1/5 இலாப பங்கிற்கு கூட்டாளியாக சேர்த்துக் கொண்டனர். தியாகவிகிதத்தை கணக்கிடவும்.

அ) 1:3 ஆ) 3:1 இ) 5:3 ஈ) 3:5

8. கூற்று ( A ) : ஒரு கூட்டாளியைச் சேர்க்கும்து புதிய இலாபப் பகிர்வு விகிதம் நிர்ணயிக்க வேண்டியது அவசியம்.

காரணம் (R) : புதிய இலாபப் பகிர்வு விகிதம் ஒப்புக்கொள்ளவில்லை என்றால், கூட்டாளிகள் இலாபம் மற்றும் நட்டத்தை சமமாகப் பகிர்ந்து கொள்ளமுடியாது.

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

அ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் R என்பது சரியான விளக்கம் அல்ல.
ஆ) A மற்றும் R இரண்டும் சரி . மேலும் R என்பது சரியான விளக்கம்
இ) A சரி ஆனால் R தவறு
ஈ) A தவறு ஆனால் R சரி

9. ஒரு புதிய கூட்டாளியை சேர்க்கும் போது, செய்யப்படும் பின்வரும் சரிக்கட்டுதல்களில் எது சரியான கூற்று?

i) பகிர்ந்து தரா இலாபம், காப்பு மற்றும் நட்டம் ஆகியவற்றை பகிர்ந்தளித்தல்
ii) சொத்துகளையும் பொறுப்புகளையும் மறுமதிப்பீடு செய்தல்
iii) புதிய இலாபவிகிதம் மற்றும் தியாகவிகிதத்தை நிர்ணயித்தல்
iv) நற்பெயர் சரிக்கட்டுதல்

அ) (i) மட்டும் சரி ஆ) (ii) மற்றும் (iii) சரி
இ) (iii) மற்றும் (iv) சரி ஈ) அனைத்தும் சரி

10. தவறான சமன்பாடு எது?

அ) தியாகப் பங்கு = பழைய பங்கு - புதிய பங்கு
ஆ) பழைய பங்கு = தியாகப் பங்கு + புதிய பங்கு
இ) புதிய பங்கு = தியாகப் பங்கு - பழைய பங்கு
ஈ) புதிய பங்கு = பழைய பங்கு - தியாகப் பங்கு

## பகுதி --- II

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 17- க்கு கட்டாயம் விடையளிக்கவும். 5 × 2 = 10

11. புதிய கூட்டாளி சேர்க்கையின் போது, பகிர்ந்து தரா இலாபங்கள் மற்றும் நட்டங்கள் எவ்வாறு கூட்டாளிகளிக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது?

12. தியாக விகிதம் என்றால் என்ன?

13. பின்வருவனவற்றுள் மறுமதிப்பீட்டு கணக்கில் பற்று அல்லது வரவு வைக்கப்படுவதைத் தரவும்.

(அ) சொத்தின் மீதான தேய்மானம் (ஆ) பதிவுறா பொறுப்புகள்
(இ) கொடுபடவேண்டிய செலவிற்கான ஒதுக்கீடு (ஈ) சொத்தின் மீதான மதிப்பேற்றம்

14. நளினி மற்றும் வித்யா எனும் கூட்டாளிகள் முறையே 3:2 எனும் விகிதத்தில் இலாப நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 31.03.2018 அன்று ஈஸ்வரி என்பவரை கூட்டாளியாக சேர்த்தனர். அவர் சேர்ந்த நாளில் நிறுவன ஏடுகளில் காப்புநிதி ₹. 15,000 எனக் காட்டியது. காப்பு நிதியை பகிர்ந்தளிக்க குறிப்பேட்டுப் பதிவு தரவும்.

15. ரமேஷ், உமேஷ் என்ற கூட்டாளிகள் முறையே 3 : 2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். 31-03-2018 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | ₹. | சொத்துகள் | ₹. |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 30,000 | வங்கி | 8,000 |
| இலாப நட்ட பகிர்வு க/கு | 23,000 | பற்பல கடனாளிகள் | 30,000 |
| தொழிலாளர் ஈட்டு நிதி | 5,000 | சரக்கிருப்பு | 20,000 |
| முதல் கணக்குகள் | | நிலமும் கட்டடமும் | 70,000 |
| ரமேஷ் ₹. 40,000 | | | |
| உமேஷ் ₹.30,000 | 70,000 | | |
| | 1,28,000 | | 1,28,000 |

2018, ஏப்ரல் 1 அன்று, இராஜேஷ் என்பவரை கூட்டாளியாகச் சேர்த்தனர். கூட்டாளி சேர்ப்பின் போது பகிர்ந்து தரா இலாபம் மற்றும் காப்பினை பகிர்ந்தளிக்க குறிப்பேட்டுப் பதிவு தரவும்.

16. அரவிந்தன் மற்றும் குரு எனும் கூட்டாளிகள் முறையே 3:1 எனும் விகிதத்தில் இலாப நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 1.4.2017 லோகேஷ் என்பவரை புதிய கூட்டாளியாக சேர்த்தனர். கீழ்க்கண்ட சரிக்கட்டுதல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

i) சரக்கிருப்பு மதிப்பை ₹. 12,000 உயர்த்த வேண்டும்

ii) ஏடுகளில் பதிவு பெறாமலுள்ள முதலீடுகள் ₹. 6,000 தற்போது பதிவு செய்தல் வேண்டும்

iii) அலுவலக சாதனங்கள் மதிப்பை ₹. 2,000 குறைக்க வேண்டும்.

மறுமதிப்பீடு கணக்கு தயாரிக்கவும்.

17. கண்மணி மற்றும் ஷாலினி என்ற இரு கூட்டாளிகள் 7:3 என்ற இலாப விகிதத்தில் இலாபத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் கோமதி என்பவரை கூட்டாண்மையில் சேர்த்துக் கொண்டனர். கண்மணி, ஷாலினி மற்றும் கோமதி அவர்களின் புதிய இலாபவிகிதம் 5:2:3. தியாக விகிதத்தைக் கணக்கிடவும்.

## பகுதி --- III

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 24 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். $5 \times 3 = 15$

18. வேல்முருகன் , அப்பாஸ் மற்றும் பிரதீப் ஆகிய கூட்டாளிகள் இலாப நட்டங்களை 5:3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். 2017, ஏப்ரல் 1 அன்று பிரகாஷ் புதிய கூட்டாளியாகச் சேர்த்தபின் அவர்களின் இலாப விகிதம் 4:3:2:1 என முடிவு செய்யப்பட்டது. பின்வரும் சரிக்கட்டுதல்கள் செய்யப்பட வேண்டும்:

i) வளாகத்தின் மதிப்பு ₹. 60,000 அதிகரிக்கப்பட்டது

ii) சரக்கிருப்பு மீது ₹. 5,000, அறைகலன் மீது ₹. 2,000, இயந்திரம் மீது ₹. 2,500 தேய்மானம் நீக்கப்பட வேண்டும்.

iii) கொடுபட வேண்டிய பொறுப்பு ₹.500 உருவாக்கப்பட வேண்டும்.

மறுமதிப்பீட்டுக் கணக்கினை தயார் செய்யவும்.



19. சதீஷ் மற்றும் மகேஷ்வரன் இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். அவர்கள் 5:3 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வருகின்றனர். 2018 ஏப்ரல் 1 அன்று விடுதலைவிரும்பி என்பவரை கூட்டாளியாகச் சேர்த்துக் கொண்டனர். விடுதலைவிரும்பி கூட்டாண்மையில் சேர்ந்த அன்று, நிறுவன ஏடு நற்பெயர் மதிப்பினை ₹. 40,000 என்று காட்டியது. மாறுபடும் முதல் முறையில் பராமரிக்கப்படுவதாக கருதி தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும். கூட்டாளிகள் பின்வரும் முடிவினை எடுத்தனர்.

i) ஏட்டில் உள்ள நற்பெயர் தொகை முழுவதையும் போக்கெழுதுவது

ii) ஏட்டில் உள்ள நற்பெயரில் ₹. 32,000 மட்டும் போக்கெழுதுவது

20. விஷ்ணு மற்றும் யுக்கேஷ் இருவரும் கூட்டாளிகள். அவர்கள் 3:2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். அவர்களது 31-12-2018 நாளன்றைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு இருந்தது.

| பொறுப்புகள் | ₹. | சொத்துகள் | ₹. |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 45,000 | அறைகலன் | 25,000 |
| காப்பு நிதி | 5,000 | பற்பல கடனாளிகள் | 10,000 |
| முதல் கணக்குகள் | | சரக்கிருப்பு | 20,000 |
| விஷ்ணு ₹. 30,000 | | கைரொக்கம் | 35,000 |
| யுக்கேஷ் ₹. 20,000 | 50,000 | இலாப நட்ட க/கு ( நட்டம்) | 10,000 |
| | 1,00,000 | | 1,00,000 |

பின்வரும் சரிக்கட்டுதல்களில் 01.01.2019 அன்று சூரியா என்பவர் நிறுவனத்தின் புதிய கூட்டாளியாக சேர்கிறார்.

i) சூரியா 1/4 இலாபப் பங்கிற்காக ₹. 10,000 முதல் கொண்டு வருகிறார்.

புதிய கூட்டாளி சேர்க்கைக்கு பின் நிறுவனத்தின் முதல் கணக்கினை தயார் செய்யவும்.

**கூடுதல் தகவல்**

மறுமதிப்பீட்டு இலாபம் : விஷ்ணு முதல் க / கு ₹. 3,600

யுக்கேஷ் முதல் க / கு ₹. 2,400

21. தௌபிக், இராஜேஷ் என்ற கூட்டாளிகள் முறையே 4 : 3 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். சாரதி என்பவரைச் சேர்க்க முடிவு செய்த பிறகு, பின்வருமாறு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை மறுமதிப்பீடு செய்தனர்.

அ) கட்டட மதிப்பை ₹. 50,000 அதிகப்படுத்த வேண்டும்.

ஆ) ஐயக்கடன் ஒதுக்கு ₹. 500 குறைக்க வேண்டும்.

இ) இயந்திர மதிப்பை ₹. 15,000, அறைகலன் ₹. 4,000 மற்றும் சரக்கிருப்பு ₹. 10,500 குறைக்க வேண்டும். மறுமதிப்பீட்டுக் கணக்கைத் தயாரிக்கவும்.

22. 2018, மார்ச் 31 ஆம் நாளைய ஜானகி மற்றும் சினேகா இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

| பொறுப்புகள் | ₹. | சொத்துகள் | ₹. |
|---|---|---|---|
| தொழிலாளர் ஈட்டு நிதி | 10,000 | கட்டடம் | 50,000 |
| பொதுகாப்பு | 40,000 | பற்பல கடனாளிகள் | 60,000 |
| முதல் கணக்குகள் | | சரக்கிருப்பு | 8,000 |
| ஜானகி ₹.50,000 | | வங்கி ரொக்கம் | 32,000 |
| சினேகா ₹.30,000 | 80,000 | | |
| பற்பல கடனீந்தோர் | 20,000 | | |
| | 1,50,000 | | 1,50,000 |

ஜானகி, சினேகா இருவரும் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 3:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர். அவர்கள் அமீராவை 1/4 பங்கு விகிதத்தில் கூட்டாண்மையில் சேர்த்துக்கொண்டு, பின்வரும்சரிக்கட்டுதல்கள் பின்பற்றப்படுகின்றன:

a) அமீரா ₹. 20,000 முதலாக கொண்டு வரவேண்டும்.
b) கட்டடத்தின் மீது 10% தேய்மானம் உருவாக்கவும்.
c) சரக்கிருப்பு ₹. 6,000 என மறுமதிப்பீடு செய்யப்படுகிறது.
d) வாராஐயக்கடன் ஒதுக்கு 5% உருவாக்கவும்.

கூட்டாளி சேர்க்கைக்கு பின் மறுமதிப்பீட்டுக் கணக்கினை தயார் செய்யவும்.

23. தமிழன்னை மற்றும் விஜி என்ற இரு கூட்டாளிகள் 5:3 விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் திவ்யா என்பவரை கூட்டாளியாகச் சேர்த்தனர். திவ்யா தமிழன்னையிடமிருந்து 1/5 பங்கும், விஜியிடமிருந்து 1/5 பங்கும் பெறுகிறார். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாகவிகிதம் கணக்கிடவும்.

24. சிவசங்கரி மற்றும் பியதர்ஷிணி இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். அவர்கள் 5:1 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வருகின்றனர். அவர்கள் கொளசல்யா என்பவரை 2/9 இலாப விகிதத்தில் நிறுவனத்தில் சேர்க்க முடிவு செய்கின்றனர். சேர்க்கையின் போது நிறுவனத்தின் நற்பெயர்மதிப்பு ₹. 81,000 என்று மதிப்பிடப்படுகிறது. கொளசல்யாவால் தன்னுடைய பங்கிற்கான நற்பெயர் மதிப்பிற்கான தொகையைக் கொண்டு வரமுடியவில்லை. நிறுவனம் மாறுபடும் முதல் முறையில் கணக்கினைப் பராமரிக்கிறதெனக் கொண்டு தேவையான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

## பகுதி --- IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3 × 5 = 15

25. மகேஷ் மற்றும் தனுஷ் என்றஇரு கூட்டாளிகள் 2:1 என்றவிகிதத்தில் இலாபநட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் அருண் என்பவரை 1/4 பங்குக்கு கூட்டாளியாகச் சேர்த்தனர். அருண் தன்னுடைய பங்கை மகேஷ் மற்றும் தனுஷ் ஆகிய இரு கூட்டாளிகளிடமிருந்தும் சமவிகிதத்தில் வாங்கினார். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடவும்.

( அல்லது )



பவித்ரா, கலைச்செல்வி என்ற கூட்டாளிகள் முறையே 3:2 என்றவாறு இலாபம் பகிர்ந்து கொள்கின்றனர்.

31-03-2018 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | ₹. | சொத்துகள் | ₹. |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 70,000 | வங்கி ரொக்கம் | 40,000 |
| காப்பு நிதி | 30,000 | பற்பல கடனாளிகள் | 60,000 |
| முதல் கணக்குகள் | | அறைகலன் | 80,000 |
| பவித்ரா ₹. 1,60,000 | | இயந்திரம் | 1,20,000 |
| கலைச்செல்வி ₹. 1,40,000 | 3,00,000 | முன்கூட்டி செலுத்திய காப்பீடு | 80,000 |
| | | சரக்கிருப்பு | 20,000 |
| | 4,00,000 | | 4,00,000 |

அவர்கள் கவியரசி என்பவரை 1/5 பின்வரும் பகிர்வுகளுக்கு உட்பட்டு கூட்டாண்மையில் சேர்த்துக் கொள்ள முடிவு செய்தனர்.

i) கவியரசி ₹. 60,000 முதல் கொண்டுவருகிறார். நற்பெயரில் அவருடைய பங்கு ₹. 20,000 மதிபிடப்படுகிறது. அவர் நற்பெயருக்கான ரொக்கம் கொண்டு வரவில்லை.
ii) சரக்கிருப்பின் மதிப்பு ₹. 28,000 ஆக அதிகரிக்கப்பட்டது.
iii) அறைகலன் மீது 5% தேய்மானம்நீக்கப்படவேண்டும்.
iv) இயந்திரம் மதிப்பு ₹. 1,60,000 ஆக மறுமதிப்பீடு செய்யப்பட்டது.

தேவையான பேரேட்டு கணக்குகள் தயார்செய்து சேர்ப்பிற்கு பின் உள்ள இருப்புநிலைக் குறிப்பினைத் தயார் செய்யவும்.

26. ஜெயமாலினி , வித்யா என்ற கூட்டாளிகள் முறையே 3 : 2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். 31-03-2009 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | தொகை ₹ | சொத்துகள் | தொகை ₹ |
|---|---|---|---|
| கடனீந்தோர் | 80,000 | வங்கி | 10,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு | 20,000 | பற்பல கடனாளிகள் | 1,30,000 |
| இலாப நட்டக்கணக்கு | 1,00,000 | சரக்கிருப்பு | 20,000 |
| முதல் கணக்கு: | | இயந்திரம் | 40,000 |
| ஜெயமாலினி ₹. 40,000<br>வித்யா ₹. 30,000 | 70,000 | நிலம்,கட்டிடம் | 70,000 |
| | 2,70,000 | | 2,70,000 |

அவர்கள் பின்வரும் பகிர்வுகளுக்கு உட்பட்டு தமிழன்னை என்பவரை புதிய கூட்டாளியாக சேர்த்துக் கொள்ள முடிவு செய்தனர்.

i) தமிழன்னை ₹. 30,000 முதல் கொண்டு வருவது.
ii) நிலம் - கட்டிடம் 10 % மதிப்பேற்றம் செய்வது.
iii) சரக்கிருப்பு மதிப்பை ₹. 3,000 குறைப்பது.
iv) கொடுபடா பொறுப்புக்கு ₹. 2,000 ஒதுக்கு உருவாக்குவது.

மறுமதிப்பீட்டு கணக்கு மற்றும் முதல் கணக்குகள் ஆகியவற்றைத் கூட்டாளி சேர்ப்பிற்குப் பின் தாயாரிக்கவும்.

( அல்லது )

கமலா, விமலா என்ற கூட்டாளிகள் முறையே 3 : 2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர்.

31-03-2018 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | ₹. | சொத்துகள் | ₹. |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 70,000 | வங்கி | 10,000 |
| செலுத்துதற்குரிய மாற்றுச் சீட்டுகள் | 25,000 | பற்பல கடனாளிகள் | 30,000 |
| முதல் கணக்குகள் | | சரக்கிருப்பு | 20,000 |
| கமலா 60,000 | | இயந்திரம் | 60,000 |
| விமலா 40,000 | 1,00,000 | நிலமும் கட்டடமும் | 70,000 |
| பொதுக்காப்பு | 10,000 | ரொக்கம் | 20,000 |
| இலாப நட்ட க / கு | 5,000 | | |
| | 2,10,000 | | 2,10,000 |

01-04-2018 அன்று அமலா என்பவரை பின்வரும் பகிர்வுகளுக்கு உட்பட்டு சேர்த்துக் கொள்ள முடிவு செய்தனர்.

i) அமலா ₹. 30,000 முதல் கொண்டுவருவது.
ii) அமலா நற்பெயரில் தன்னுடைய பங்காக ₹. 20,000 ரொக்கமாக கொண்டுவந்தார்
iii) நிலம் - கட்டடத்தை 10 % மதிப்பேற்றம் செய்வது.
iv) சரக்கிருப்பை ₹. 2,000 குறைப்பது
v) கொடுபடா பொறுப்பு ₹. 5,000 உருவாக்குவது

மறுமதிப்பீட்டுக் கணக்கு, முதல் கணக்கு மற்றும் வங்கி கணக்கு ஆகியவற்றைத் தயாரிக்கவும்.

27. ஆனந்த் மற்றும் பாலு என்ற கூட்டாளிகள் முறையே 7 : 3 எனும் விகிதத்தில் இலாப நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 31 மார்ச், 2018 ஆம்நாளைய அவர்களது இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு:

| பொறுப்புகள் | ₹. | சொத்துகள் | ₹. |
|---|---|---|---|
| முதல் கணக்குகள் | | கைரொக்கம் | 5,000 |
| ஆனந்த் ₹.25,000 | | பற்பல கடனாளிகள் | 10,000 |
| பாலு ₹.15,000 | 40,000 | சரக்கிருப்பு | 20,000 |
| பற்பல கடனீந்தோர் | 10,000 | நிலம் | 30,000 |
| இலாப நட்ட க/கு | 15,000 | | |
| | 65,000 | | 65,000 |



2018 ஏப்ரல் 1 ஆம் நாளன்று அவர்கள் சந்துரு என்பவரை கீழ்க்காணும் சரிக்கட்டுதல்களுக்கு ஒப்புக்கொண்டு 1/4 பங்குக்கு கூட்டான்மையில் சேர்த்துக் கொண்டனர்

(அ) சரக்கிருப்பு மதிப்பை 1,500 குறைப்பது
(ஆ) வாராஜயக்கடன் ஒதுக்கு 1,000 உருவாக்குவது
(இ) நிலத்தின் மதிப்பை 5,000 மதிப்பேற்றம்செய்வது

தேவையான பேரேட்டு கணக்குகள் தயார்செய்து சேர்ப்பிற்கு பின் உள்ள இருப்புநிலைக் குறிப்பினைத் தயார் செய்யவும்.

( அல்லது )

குமார், வாலி என்ற கூட்டாளிகள் முறையே 7 : 3 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர்.

31-03-2019 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | தொகை ₹ | சொத்துகள் | தொகை ₹ |
|---|---|---|---|
| கடனீந்தோர் | 25,000 | வங்கி | 15,000 |
| முதல் கணக்கு: | | சரக்கிருப்பு | 20,000 |
| குமார் ₹. 70,000 | 1,00,000 | நிலம் | 90,0000 |
| வாலி ₹. 30,000 | | | |
| | 1,25,000 | | 1,25,000 |

01-04-2019 அன்று அஜய் என்பவரை பின்வரும் பகிர்வுகளுக்கு உட்பட்டு சேர்த்துக் கொள்ள முடிவு செய்தனர்.

i) அஜய் ₹. 20,000 முதல் கொண்டுவருவது.
ii) நிலத்தின் தற்போதைய மதிப்பை ₹. 1.00,000 ஆக கொள்வது.
iii) சரக்கிருப்பை ₹. 2,000 குறைப்பது

மறுமதிப்பீட்டுக் கணக்கு, முதல் கணக்கு மற்றும் புதிய கூட்டாண்மை நிறுவனத்தின் இருப்புநிலைக் குறிப்பு ஆகியவற்றைத் தயாரிக்கவும்.